நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

## தரம்: உயர்நிலை

***November 2008***

வினாக்கள் : 60

வழங்கப்படும் நேரம் : 70 நிமிடங்கள்

(வாசிப்பதற்கான நேரம் : 10 நிமிடங்கள் உட்பட)

**உங்கள் பதில்களை தரப்பட்ட விடைத்தாளில் குறியிடுக.**

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்யவும்.**

**பரீட்சை- ஒரு பார்வை**

(நி.ச.வே பரீட்சைகள் சபையின் இணையத்தளத்திலிருந்து பிரித்தெடுத்த பகுதி)

இவ்வருடம் நியூசவுத்வேல்ஸ் மாநிலத்தில் 67931 மாணவர்கள் HSC எனப்படும் உயர்கல்விச் சான்றிதழ் பரீட்சைக்குத் தோற்றுகிறார்கள். இம்மாநிலத்தில் ஆண்டு 12ஐ நிறைவுசெய்த அதிகூடிய மாணவர் தொகை இதுவாகும். இவர்களில் சில மாணவர்கள் விரைவு நிகழ்ச்சித் திட்டம் (accelerated programme) மூலமாக சில பாடங்களை எடுக்கிறார்கள். ஒருவர் HSC பரீட்சையை நிறைவு செய்வதற்கு ஐந்து வருடங்கள் வரை எடுக்கலாம். ஆங்கிலம் கட்டாயபாடமாகும். ஏனைய பாடங்கள் அனைத்தும் தெரிவுப் பாடங்களாகும்.

ஆங்கிலம் முதல் தமிழ் வரையான 40க்கும் மேற்பட்ட மொழிகள், பௌதிகவியல் முதலான விஞ்ஞான கற்கைகள், நாடகம், மென்பொருள் வடிவமைப்பும் அபிவிருத்தியும் ஆரம்ப கைத்தொழில்கள் என வேறுபட்ட கற்கைநெறிகளுக்கு 110 வெவ்வேறு பரீட்சைகள் 750 பரீட்சை நிலையங்களில் நடைபெறுகின்றன. இவற்றில் ஹொங்கொங், இந்தோனேசியா, மலேசியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் உள்ள பாடசாலைகளும் அடங்கும். 13 மில்லியன் அச்சடித்த பக்கங்களிலிருந்து வினாக்களை மாணவர்கள் வாசித்து 1.75 மில்லியன் விடைத்தாள் புத்தகங்களில் (booklets) பதிலளிப்பர்.

ஒவ்வொரு பரீட்சை நிலையத்திற்கும் அனுப்பி வைப்பதற்கு ஏதுவாக 50 ஆயிரம் வினாத்தாள் பொதிகள் தயாராகியுள்ளன. ஏறத்தாள ஆறுவாரகாலமாக முப்பதுபேருக்கும் அதிகமான ஒரு குழு வினாத்தாள்களைப் பொதிசெய்துள்ளது. நி.சவே மாநிலத்தில் ஐந்தாயிரம் பரீட்சை மேற்பார்வையாளர்களும், ஏழாயிரம் திருத்துனர்களும் பரீட்சைக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பரீட்சைகளில் கணினி மற்றும் தொழில்நுட்பப் பயன்பாட்டை அதிகரிக்கும் திட்டத்தின் ஒரு அங்கமாக, இம்முறை, சில திருத்துனர்கள் கணினி உதவியுடன் சிலபாடங்களைத் திருத்தவுள்ளனர். பொதுக்கணிதம், மற்றும் சில மொழிகளுக்கான பாடங்களில் மாணவர்கள் கணினி உதவியுடன் விடையளிக்கும்போது விடைத்தாள் திருத்துவோரும் இணையத்தொடர்புள்ள கணினியிலேயே விடைகளைத் திருத்தி புள்ளிகளைப் பதிவுசெய்வர். பாடசாலைகளில் நடைபெற்ற மாணவரின் உள்ளக மதிப்பீட்டுப் புள்ளிகள் அனைத்தும் பரீட்சைப் பிரிவிற்குக் கிடைத்துள்ளது. பாடசாலை மதிப்பீட்டுப் புள்ளிகளினதும் பரீட்சைப் புள்ளிகளினதும் சராசரிப் புள்ளியே ஒரு மாணவரின் HSC புள்ளியாகும்.

பரீட்சைக்குப் பதிவுசெய்யப்பட்ட பாடங்களும் மாணவர் எண்ணிக்கையும் அகர வரிசையில்:
**ஆங்கிலம்:** 64509 **இரசாயனம்:** 10308 **உயிரியல்:** 15468 **கணிதம்:** 52262
**சட்டக்கற்கைகள்:** 08484 **சமயக் கற்கைகள்:** 13631 **சுகாதாரமும் உடற்கல்வியும்:** 13781
**நவீன வரலாறு:** 09773 **புராதன வரலாறு:** 11326 **பொருளியல்:** 05491
**பௌதிகவியல்:** 09198 **வியாபாரக் கற்கைகள்:** 16401

HSC பரீட்சார்த்திகளில் பத்து வீதமானவர்கள் குறைந்தது ஒருமொழியையாவது பரீட்சைக்கு எடுக்கின்றனர். ஆயிரத்து ஐந்நூறு மாணவர் ஜப்பானிய மொழியையும், ஆயிரத்து நானூறு மாணவர் பிரஞ்சு மொழியையும் ஆயிரத்து இருநூறு மாணவர் சீன மொழியையும் பரீட்சைக்கு ஒரு பாடமாக எடுக்கின்றனர். இவற்றில் ஜப்பான், பிரஞ்சு சீனம் ஆகிய மொழிகள் மிகப் பிரசித்தமான மூன்று மொழிகளாகும். முதல் பத்து மொழிகளில் ஐந்து ஐரோப்பிய மொழிகள், மூன்று ஆசிய மொழிகள், ஒன்று மத்தியகிழக்கு மொழி. மற்றயது செம்மொழி இலத்தீன். ஒன்பது மாணவர் தமிழ் மொழிப் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

.

**வினாக்கள் 1-10: பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. உரைப்பகுதி பற்றிய மிகப்பொருத்தமான கூற்று.

   (a) இது ஒரு பத்திரிகைச் செய்தி
   (b) இது கல்வி அமைச்சர் விடுத்த செய்தி
   (c) இது இணையத்தளத்திலிருந்து எடுக்கப்பட்ட செய்தி
   (d) மேற்கூறிய அனைத்தும் சரியானவை.

2. பின்வருவனவற்றில் உரைப்பகுதியில் கூறப்படாத செய்தி என்ன?

   (a) நி.சவே மாநிலத்தில் அறுபத்தேழாயிரம் பேருக்கு மேல் பரீட்சை எடுக்கிறார்கள்.
   (b) நி.ச.வே மாநிலத்தில் 50 ஆயிரம் வினாத்தாள் பொதிகள் தயார் செய்யப்பட்டன.
   (c) வினாத்தாள்களின் மொத்தப் பக்கங்கள் 13 மில்லியனாகும்.
   (d) விக்ரோறியா மாநிலத்தில் சுமார் 9 பேர் தமிழ்மொழிப் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

3. இவ்வுரைப்பகுதியின் நோக்கம்:

   (a) இணையத்தளத்தில் செய்தியாகப் போடுவதற்கு உதவுவது
   (b) HSC பரீட்சை பற்றிய ஒரு கண்ணோட்டத்தை எல்லோருக்கும் வழங்குவது
   (c) பாடசாலைக் கல்விக்கு உரைப்பகுதியாக பயன்படுவது
   (d) மேற்கூறிய எதுவுமல்ல.

4. இங்கு கூறப்பட்ட பாடங்கள் மற்றும் பரீட்சைகள் தொடர்பான உரைப்பகுதி

   (a) விமர்சனம்
   (b) வருணனை
   (c) தகவல்
   (d) உற்சாகப்படுத்தும் வார்த்தைகள்.

5. இந்த உரைப்பகுதியில் கூறப்பட்ட தகவல்களைப் பிரசுரம் செய்யமுடியாத சாதனம்

   1. பத்திரிகை 2. பஞ்சாங்கம் 3. தினக்குறிப்பேடு 4. சமய சஞ்சிகை

இவற்றில் சரியானது
   (a) ஒன்றும் நான்கும்
   (b) ஒன்றைத் தவிர்ந்த ஏனைய மூன்றும்
   (c) நான்கு மட்டும்
   (d) இவை எல்லாம்.

6. பின்வருவனவற்றில் மிகச்சரியான கூற்று

   1. பரீட்சைக்குத் தோற்றுவோரின் மொத்தத் தொகை அறுபத்தேழாயிரம்
   2. ஆங்கிலம் ஒரு தெரிவுப்பாடம்
   3. மிகப்பிரபலமான தெரிவுப் பாடம் கணிதம்.

இவற்றில் சரியானது
   (a) ஒன்றும் இரண்டும்
   (b) இரண்டும் மூன்றும்
   (c) ஒன்றும் மூன்றும்
   (d) மூன்று மட்டும்

7. பரீட்சை தொடர்பான கூற்றுகள்:

1. மொத்தம் 110 பரீட்சைகள் 750 பரிட்சை நிலையங்களில் நடக்கின்றன.
2. ஐரோப்பிய ஆசிய நாடுகளிலும் நி.ச.வே மாநில ர்ளுஊ பரீட்சைகள் நடக்கின்றன.
3. பன்னீராயிரம் பேர் பரீட்சைக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இவற்றில்
(a) ஒன்றும் இரண்டும் சரியானவை
(b) இரண்டும் மூன்றும் சரியானவை
(c) ஒன்றும் மூன்றும் சரியானவை
(d) இவை எல்லாம் சரியானவை

8. உரைப்பகுதியில் உள்ள பொருத்தமற்ற கூற்று

(a) இம்முறை பரீட்சை வினாத்தாள்கள் கணினியின் துணைகொண்டு திருத்தப்படும்
(b) பொதுக்கணிதம் எடுக்கும் மாணவர்கள் கணினி உதவியுடன் விடையளிப்பார்கள்
(c) இம்முறையும் 40க்கும் மேற்பட்ட மொழிகளுக்கு மாணவர்கள் தோற்றுகின்றனர்.
(d) இவை எல்லாம்.

9. உரைப்பகுதியில் சொல்லப்படாத கூற்று

(a) உள்ளக மதிப்பீட்டுப் புள்ளிகள் ஏற்கனவே கல்விச் சபைக்குக் கிடைத்துள்ளன.
(b) பரீட்சைப் புள்ளிகளினதும் மதிப்பீட்டுப் புள்ளிகளினதும் சராசரிப் புள்ளியே மாணவரின் புள்ளியாகும்.
(c) பல்கலைக் கழக அனுமதிக்கு புள்ளிகளை நிரற்படுத்தி சீரமைப்பார்கள்.
(d) இவை எதுவுமல்ல.

10. மிகவும் சரியான கூற்று

(a) ஜப்பான் மொழி மிகப் பிரபலமான பத்துமொழிகளில் ஒன்று.
(b) பிரபலமான மொழிகளில் ஐந்து ஐரோப்பிய மொழிகள்.
(c) சீன மொழியும் மிகப் பிரபலமான இரண்டாவது மொழியாகும்.
(d) இவை எல்லாம் சரி.

## வினாக்கள் 11-15: பின்வரும் வினாக்களுக்குரிய பொருத்தமான விடையைத் தெரிவு செய்யவும்.

(a) முனைவர் அப்துல் கலாம்
(b) சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
(c) கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமி
(d) மறைமலை அடிகள்.

11. ஈழத்தில் சமய சமூகப்பணிகள் செய்து பெரும்புகழ் பெற்று அண்மையில் அமரரானவர்.

12. இந்திய குடியரசுத் தலைவராக இருந்த தமிழ் விஞ்ஞானி.

13. நடராச தத்துவத்தை மேற்கு நாடுகளுக்கு புரியவைத்த ஈழத்தவர்.

14. தமிழ் நாட்டில் தனித் தமிழ் இயக்கத்தின் முன்னோடி

15. இளைஞர்களைக் கனவு காணுங்கள் என்று ஊக்குவித்த அணுவிஞ்ஞானி.

அடுத்த பக்கத்தில் தொடரும்..

**வினாக்கள் 16-18: பின்வரும் உரைப்பகுதியில் பிழையாக எழுதப்பட்ட தடித்த எழுத்திலான சொற்களுக்குச் சரியான சொற்களைக் குறிப்பிடுக.**

பெரியோர்களே! தாய்மார்களே! இளஞ்சந்ததியினர்களே!
இழப்புகளைக் கண்டும் கேட்டும் இடிந்துபோகும் இனம் தன்னை முன்னெடுத்துச் செல்வது அரிது. அவ்வினம் தனது முன்னைய **பெருமைகலை** அசைபோட்டால் தலைநிமிர்ந்து தன் **வாள்நாளை** வளம் மிக்கதாக மாற்றி அமைக்க முடியும். இது உலகம் கண்ட உண்மை. இதை விட்டு விட்டு அழுந்தி அழுந்தி கூனிக் குறுகிப் போதல், அழிவுக்கே கொண்டு செல்லும். இந்த நியதியை மறந்து பழம் பெருமைகளை சிந்தித்து அவற்றால் ஓர்மம் மிகுந்து நிற்கும் இனத்தை புளுகினி என்று கூறுதல் பாரிய தவறு.
யாழ் நூலகத்தை 1981 ஜூன் 1ஆம் திகதி தீவைத்து அழித்தபோது **பேரிணவாதம்** தன்கைங்கரியத்தைக் கண்டு இறுமாப்படைந்திருந்தது. ஆனால் அந்நிலைமையைத் தமிழினம் நீடிக்க விடவில்லை. நூலகத்தை மீண்டும் உயிர்ப்பிக்க முற்பட்டனர். தமிழினத்தோடு உலகின் பல்வேறு இனங்களும் தோள் கொடுத்து அதனை மீண்டும் உருவாக்க தம்மாலான சகல உதவிகளையும் செய்திருக்கிறார்கள்.
1984 ஜூன்மாதம் நூல்நிலையம் உயிர்த்து எழுந்தது. ஆயினும் யாழ்ப்பாணத்தில் 1985இல் போர் வெடித்தபோது மீண்டும் யாழ் நூல் நிலையம் பெரும் சேதத்திற்குள்ளானது. நூல்களை வேறிடத்திற்கு மாற்றியபோதும், அனாதரவான கட்டிடங்களையோ, அதன் அழகுச் சின்னங்களையோ காப்பாற்ற முடியவில்லை.

16. பெருமைகலை

(a) பெருமைகழை
(b) பெருமைகளை
(c) பெறுமைகளை
(d) பெறுமகலை

17. வாள்நாளை

(a) வாள்நாலை
(b) வாழ்நாளை
(c) வாள்நாழை
(d) இவை எல்லாம் சரி

18. பேரிணவாதம்

(a) பேரினவாதம்
(b) பேரின் இனவாதம்
(c) பேர் இனவாதம்
(d) இவை எதுவுமல்ல

## வினாக்கள் 19-20: பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

19. நூலகத்தை மீண்டும் உயிர்ப்பிக்க முற்பட்டனர் என்பதில் உயிர்ப்பிக்க என்பதற்குப் பொருத்தமான பொருள்

(a) உயிர்கொடுக்க
(b) இயங்கவைக்க
(c) இவை இரண்டும் சரி
(d) இவை இரண்டும் பிழை

20. தன் கைங்கரியத்தைக் கண்டு இறுமாப்படைந்திருந்தது என்பதில் இறுமாப்படைந்திருந்தது என்பதற்குச் சரியான பொருள்.

(a) பெருமையடைந்திருந்தது
(b) செருக்கடைந்திருந்தது
(c) கருவமடைந்திருந்தது
(d) இவை எதுவுமல்ல

## வினாக்கள் 21-25: பின்வருவனவற்றிற்குப் பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்க.

(a) குத்துவிளக்கு
(b) தசாவதாரம்
(c) குசேலன்
(d) விஜயகாந்த்

21. கண்ணனின் நண்பரை நினைவு படுத்தும் ஒரு திரைப்படப் பெயர்.

22. ஈழத்தில் தயாரான ஒரு தமிழ்த் திரைப்படம்

23. இரு சமயத்தவர்களின் மோதலை முதல்காட்சியாகக் கொண்ட திரைப்படம்

24. கதாநாயகனாக இருந்து இப்போது அரசியல் கட்சியை ஆரம்பித்தவர்

25. கமலஹாசன் பத்துவேடங்களில் தோன்றிய திரைப்படம்

## வினாக்கள் 26-28: பின்வரும் செய்யுள் அடி ஒவ்வொன்றிற்கும் தொடர்ந்துவரும் அடியைத் தெரிவுசெய்க.

(a) சங்காரம் நிசம் என்று சங்கே முழங்கு
(b) நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ
(c) அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்.
(d) தீதும் நன்றும் பிறர்தர வாரா

26. யாதும் ஊரே யாவரும் கேளிர்

27. பொங்கு தமிழுக்கு இன்னல் விளைந்தால்

28. நல்லதோர் வீணை செய்தே அதை

## வினாக்கள் 29-30: பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

29. இரட்டைக் காப்பியங்கள் எனப் போற்றப்படுபவை:

(a) மகாபாரதமும் இராமாயணமும்
(b) சிலப்பதிகாரமும் மணிமேகலையும்
(c) மணிமேகலையும் சீவகசிந்தாமணியும்
(d) வளையாபதியும் குண்டலகேசியும்.

30. பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

**வைகை நதி பாயும் நிலம்**

(a) மதுரை
(b) தஞ்சாவூர்
(c) கோவை
(d) சென்னை

## வினாக்கள் 31-33: பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

(a) மதுரை
(b) தஞ்சை
(c) ஊட்டி
(d) கன்னியாகுமரி

31. தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைந்துள்ள இடம்

32. திருவள்ளுவரின் 133அடி உயரச் சிலை அமைந்துள்ள இடம்

33. குறிஞ்சி நிலம்

## வினாக்கள் 34-37: பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

(a) வணிக இதழ்
(b) வரலாற்றிதழ்
(c) இலக்கியவிதழ்
(d) ஆண்டிதழ்

34. தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் கணையாளி

35. தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் காலச்சுவடு

36. தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் ஆனந்த விகடன்

37. இலங்கையிலிருந்து வெளிவரும் மல்லிகை

## வினாக்கள் 38-40: பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

38. மெகாத் தொடர் என்பதில் வரும் மெகா என்பதற்குப் பொருத்தமான தமிழ்ச்சொல்

(a) சிறிய
(b) பெரிய
(c) இவை இரண்டும் சரியானவை
(d) எல்லாம் பிழை

39. வாடா மலரே வாடா என்பதில் முதலில் வரும் வாடா என்பதன் பொருள்.

(a) வா என அழைத்தல்
(b) வாடா எனக் கோபத்தோடு அழைத்தல்
(c) வாடாத
(d) இவை எல்லாம் பிழை

40. ஒரு கூட்டத்தில் பேசும்போது முதலில் நாம் விழிக்கவேண்டியவர்

(a) தலைவர்
(b) பிரதம விருந்தினர்
(c) சபையோர்
(d) பெற்றோர்

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து 41-50 வினாக்களுக்கு விடை தருக.**

**வெண்ணிலாவுக்கு விண்கலம்**

சந்திரனுக்கு இந்தியா முதன்முதலாக அனுப்பும் ஆள் இல்லா விண்கலமான சந்திரயான்-1, ஆந்திர மாநிலம் சிறீஹரிகோட்டா விண்வெளி மையத்தில் இருந்து அக்டோபர் 22ஆம் திகதி காலை 6.20 மணிக்கு (41) ____________________ ஏவப்பட்டது. இதற்கான ஆயத்தவேல்லகள் திங்கட்கிழமை காலை 5.20 மணிக்குத் துவங்கியது. மோசமான வானிலை காரணமாக விண்கலத்தை (42) ____________________ பாதிக்கப்படலாம் என்று கருதப்பட்ட நிலையில் சந்திரயான்1 வெற்றிகரமாக தனது விண்வெளிப் பயணத்தை தொடங்கியது. இதனால் விஞ்ஞானிகள் (43) ______________________ திளைத்துள்ளனர். சந்திராயன் -1 விண்கலத்தில், நிலாவை ஆராய்ச்சி செய்வதற்காக பதினொரு அறிவியல் (44) ____________________________________ பொருத்தப்பட்டுள்ளன. அவற்றில் ஐந்தை இந்தியாவே தயாரித்துள்ளது. மூன்றை ஐரோப்பிய விண்வெளிமையமும் இரண்டை அமெரிக்காவின் ஹநாசா“வும், எஞ்சிய ஒன்றை பல்கேரியாவும் (45)____________________________________________________. நிலாவின் மீது மோதி இந்தியாவின் (46) ______________________________________ நாட்டுவதோடு நிலாவின் மேற்பரப்பில் ஏற்படும் விளைவுகளை ஆராயும் கருவி இவற்றில் முக்கியமானது. சிறிய கோள் போன்ற அந்த கருவியை (47) ___________________________________ முன்னாள் ஜனாதிபதியும் பிரபல விஞ்ஞானியுமான அப்துல் கலாம் அவர்கள். மேலும் அண்ணாத்துரை என்ற விஞ்ஞானியின் கடின உழைப்பும் இவ்விண்கல உருவாக்கலை சாத்தியமாக்கியது. நிலாவில் தேசியக் கொடியைப் பதித்த 4-வது நாடு என்ற (48)____________________________ இந்தியாவுக்கு கிடைக்கும். அப்பணியில் உழைத்த விஞ்ஞானிகளில் இரு தமிழரும் இருந்தனர் (49) ____________________________ பெருமை தருவதாகும்.. மொத்தம் இரண்டு ஆண்டுகள் சந்திரயான்1 (50)______________________________________ ஈடுபடும்.

### வினாக்கள் 41-43: உரைப்பகுதியில் கீறிட்ட இடங்களை நிரப்புக.

| |
|---|
| (a) ஏவும்பணி<br>(b) சந்திரயான் - 1<br>(c) வெற்றிகரமாக<br>(d) மகிழ்ச்சியில் |

41. சரியான விடை எது?

42. சரியான விடை எது?

43. சரியான விடை எது?

### வினா: 44-50 உரைப்பகுதியில் கீறிட்ட இடங்களைப் பொருத்தமான சொல்கொண்டு நிரப்புக.

44. ______________________________

45. ______________________________

46. ______________________________

47. ______________________________

49. ______________________________

50. ______________________________

### வினாக்கள் 51-60: ஆக்கத்திறன் வினா

சந்திரயான் விண்கலம் செலுத்தப்பட்ட தினம் அதிகாலை சிறீஹரிகோட்டா விண்வெளி மையத்திற்கு அழைக்கப்பட்ட இந்திய விஞ்ஞான மாணவர்கள் ஐவரோடு அவுஸ்திரேலியாவிலிருந்து நீங்களும் சிறப்பு அழைப்பாளராக இணைந்து கொண்டீர்கள் எனக் கற்பனைசெய்து அங்கிருந்த ஏனைய விஞ்ஞானிகளினதும் மாணவர்களினதும் அனுபவங்களையும் உணர்வுகளையும் பதிவுசெய்க.

(உங்கள் ஆக்கம் குறைந்தது 100 சொற்களில் அமைந்திருக்கவேண்டும்.)